


# உதி கண் மருத்துவமனை

குறிப்பிடத்தக்க பல கட்டிடங்கள் நிறைந்து சென்னையின் இதயமாக கருதப்படும் ஆழ்வார்பேட்டையில், டி.டி.கே. சாலை மற்றும் மரேய்ஸ் கேட் சாலைகள் சந்திக்கும் இடத்தில், உயரமாக, ஒருவித மறைநுட்பத்துடனும் நிற்கிறது அந்தக் கட்டிடம். முனைப்பான ஒரு திட்டப்பணியினை - மருத்துவ தொழில்நுட்பத்திலும், சமுதாய நோக்கிலும்- தன்னுள்ளே அந்தக் கட்டிடம் அடக்கியிருக்கிறது. இதுவே உதி கண் மருத்துவமனை.
ஆலிவர் சாலையில் 1986 ஆம் ஆண்டு ஒரு சிகிச்சையகமாக (Clinic) 'உதி' உதித்தபொழுதே, இதை ஒரு பெரிய மருத்துவமனையாக விருத்தி செய்ய வேண்டும் என்ற அவா மனதில் எழுந்தது கண் அறுவைசிகிச்சையாளரான டாக்டர். ரவீந்திரனுக்கு. பல வருடங்கள் கழித்து 2000ஆம் ஆண்டில் 'உதி அறக்கட்டளை' தோற்றுவிக்கப்பட்டு, 2003 இல் கண் சம்பந்தப்பட்ட எல்லா நோய்களுக்கும் தீர்வு அளிக்கும் முதன்மையான மருத்துவமனைகளுள் ஒன்றாக, ஒரு பெரிய மருத்துவமனையாக 'உதி' உருவாகி, டாக்டர். ரவீந்திரனின் கனவு நனவாகியது. உதியின் ஸ்தாபகர் (Founder), மற்றும் நிர்வாக அறக்காப்பாளரும் (Managing Trustee) டாக்டர்.ரவீந்திரன் அவர்களே.

மருத்துவமனை வளாகத்தின் உள்ளே நுழைந்தவுடன் நம் கண்ணைக் கவரும் விஷயங்கள் - தூய்மையான சுற்றுப்புறம், நன்கு வடிவமைக்கப்பட்ட வாகனங்கள் நிறுத்துமிடம், அங்கு இன்முகத்துடன் இருக்கும் ஊழியர். சௌக்கியம், சந்தோஷம் இவ்விரண்டு பண்புகளும் நம்மைக் கடவுளுக்கு அருகே அழைத்துச் செல்லும் என்கின்றன நமது புராண இதிகாசங்கள். இங்கு அது நமக்கு நன்கு புலப்படுகிறது. ஒன்றுகூட்டு வரிசை (Assembly Line) போன்று அமைந்திருக்கும் நோயறி சோதனை நடைக்கூடங்களில் (Diagnostic Corridors) மகிழ்ச்சியுடன் நோயாளிகளுக்கு வழிகாட்டும் பணியாளர்கள், 'உதி அனுபவத்தை' ஒரு தனிப்பட்ட சிறந்த அனுபவமாக ஆக்குகிறார்கள். 'காத்திருக்கும் இடம்' (Waiting Hall) நிரம்பி வழிவதிலிருந்தே மருத்துவமனையின் மகோன்னதத்தை நாம் புரிந்து கொள்ளலாம் என்றாலும், 20 நிமிடத்திற்கு மேலாக யாரையும் காக்க வைக்காத பணியாளர்களின் செயல் திறனையும் அது கவனிக்க வைக்கிறது. இந்த இயங்குமுறை, மேல்மாடிகளில் நிகழ்த்தப்படும் அறுவைசிகிச்சையைப் போன்றே நுண்நயத்துடன் இருக்கிறது.

தமது தந்தையின் பாதச்சுவடுகளை பின்பற்றவேண்டும் என்ற அவாவுடன் இருந்த டாக்டர். ரவீந்திரன், 6 வயதாக இருந்தபொழுதே 'அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவராக' ஆவேன் என்று கூறியிருக்கிறார். மதுரை மருத்துவக் கல்லூரியில் படித்து 1977ஆம் ஆண்டு எம்.பி.பி.எஸ். படிப்பினை முடித்த அவர் அறுவை சிகிச்சை படிப்பு படிக்க வேண்டும் என்று மிகுந்த ஆர்வம் காட்டினார். ''கிளர்ச்சியூட்டும், அதே சமயத்தில் உயிரையும் காக்கும் அறுவை சிகிச்சை படிப்பே அப்பொழுது பெரும்பாலான இள மருத்துவர்களால் விரும்பப்பட்டது. உடனடி பலனைக் கண்கூடாகப் பார்க்க இயலும் 'விழியியல்' (Ophthalmology) மற்றும் 'கண் அறுவை சிகிச்சை' படிப்பைப் படிக்கத் தீர்மானித்தேன். கண்பார்வையற்று ஒருநாள் என்னிடம் வரும் பெண்மணி அடுத்த நாளே உலகத்தைத் தன் விழிகளாலேயே காண்கிறாள். நோயாளிகளின் முகங்களில் தோன்றும் மகிழ்ச்சியும், ஆச்சரியமும்தான் எனக்குக் கிடைக்கும் மிகப்பெரிய வெகுமதி'' என்கிறார் டாக்டர். ரவீந்திரன்.
1985 ஆம் ஆண்டு குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்னை வந்தது ஒருவிதமான சவால்தான் என்கிறார் டாக்டர். ரவீந்திரன். 'வாலன்டரி ஹெல்த் சர்விஸசில் (VHS) சேர்ந்து கண் அறுவை சிகிச்சையின் பல நுண்ணிய அம்சங்களைக் கற்றார். அவருடைய நெருங்கிய நண்பரும் அறங்காவலருமாகிய டாக்டர். பார்த்தசாரதி, கண் அறுவைசிகிச்சை முறையில் அப்பொழுது நிகழ்ந்த புதிய மாற்றங்களெல்லாம் வி.எச்.ஸ்ஸிலேயே நடந்தது. கண்புரையை (Cataract) போக்கி கண்ணுக்குள்ளே பொருத்தப்படும் விழிக்கண்ணாடி (Intra ocular Lens) 1949 வரை ஒரு கோட்பாடாக மட்டுமே இருந்து வந்தது. இந்தத் தொழில் நுட்பம் தொடர்ந்து வந்த 20 ஆண்டுகளில் படிப்படியாக உருமலர்ச்சியுற்றது. இந்தக் கோட்பாடு நிஜமாக மாறியதை வி.எச்.எஸ்ஸில் 1986 ஆம் ஆண்டு இவர்கள் கண்டார்கள். புதிய எண்ணங்களையும், கருத்துகளையும் கற்றுக்கொண்ட அதே வேளையில், வாழ்வின் நோக்கம் அவருக்குப் பிடிபட்டது - 'சமுதாயத்தைச் சேர்ந்த அனைத்து தரப்பினருக்கும் கண் பராமரிப்பு மற்றும் மருத்துவம்'.

ஆலிவர் சாலையில் தனது மருத்துவமனையைத் தொடங்கினார் டாக்டர். ரவீந்திரன். அங்கு சமுதாயத்தின் பல்வேறு தரப்பைச் சார்ந்த மக்களுக்கும் - வசதி உள்ளவர்கள், வசதி இல்லாதவர்கள் உட்பட - சிகிச்சை அளிக்கப்பட்டது. பணம் தர இயலாதவர்கள், சிகிச்சைக்காக வந்த யாரும் திருப்பி அனுப்பப்படவில்லை. சிகிச்சையகம் பிரபலமாகத் தொடங்கவே, நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தது; 'சொந்த இடத்தில் ஒரு மருத்துவமனை தேவை' என்ற உண்மையை உணர்த்தியது. கட்டிட வடிவமைப்பு, தேவையான உபகரணங்கள் தருவிப்பு, அனுமதி வாங்குதல், முதலியன அனைத்தையும் டாக்டர். ரவீந்திரன் முழுமூச்சுடன்





தானே கவனிக்க, ஆழ்வார்பேட்டையில், பரந்த இடத்தில் 2003ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது மருத்துவமனை.

மருத்துவமனையில் பணிபுரிவோரின் எண்ணிக்கை, அவர்களது திறன், 'என்.ஏ.பி.எச்' (NABH) எனப்படும் 'நேஷனல் அக்ரெடிடேஷன் ஃபார் ஹாஸ்படில்ஸ் அன்ட் ஹெல்த்கேர் ப்ரொவைடர்ஸ்' (National Accreditation Board for Hospitals and Healthcare Providers)களின் கோட்பாடுகளுக்கு இணங்க மருத்துவமனையினைக் கொண்டு வந்தது (இதில் அறுவை சிகிச்சை அறையின் தூய்மையும் அடக்கம்) வரை, மருத்துவமனையின் சாதனைகளை, தனது குழந்தையைப்பற்றிப் பேசுவது போன்ற ஆர்வத்துடன் விளக்குகிறார் டாக்டர். பார்த்தசாரதி.
நோய் அறிதல் மற்றும் சிகிச்சை முறைகளை தரப்படுத்தும் 'என்.ஏ.பி.எச்.' இன் சான்றிதழ், நிறைய கோட்பாடுகளைக் கொண்டது. மருத்துவ பேரவையைப் (Medical Council) பொருத்தவரை நடைமுறையில் மறைப்பின்மையையும் (Transparency), நோயாளிகளைப் பொறுத்தவரை சிகிச்சை முறை மற்றும் அதற்கான கட்டணங்களில் மறைப்பின்மையையும் இந்த சான்றிதழ் உறுதிப்படுத்தும். பலவகைகளான சான்றிதழ்கள் 'காத்திருக்கும் அறை'யின் சுவர்களை அலங்கரிப்பதிலிருந்து இதன் முக்கியத்துவம் நமக்குப் புலப்படுகிறது. முதுநிலை மருத்துவமனைகளின் (Post graduate Hospitals) வரிசைகளில்

கண்பார்வையற்று ஒருநாள்
என்னிடம் வரும் பெண்மணி
அடுத்த நாளே உலகத்தைத் தன்
விழிகளாலேயே காண்கிறார்.
நோயாளிகளின் முகங்களில்
தோன்றும் மகிழ்ச்சியும்,
ஆச்சரியமும்தான் எனக்குக்
கிடைக்கும் மிகப்பெரிய வெகுமதி

இடம்பெறவும் இந்த சான்றிதழ் உதவுகிறது. மிகவும் கடினமான செயல்முறைகள் இருப்பதால், தமிழ் நாட்டில் 10 மருத்துவமனைகள் மட்டுமே 'என்.ஏ.பி.எச்'. சான்றிதழ் பெற்றவை. உதி மருத்துவமனை இவற்றுள் ஒன்று. புதிதாகத் தோன்றும் மருத்துவமனைகள் ஏன் இந்தத் தரத்தை எட்ட முடிவதில்லை என்று கேட்டதற்கு, 'உதி சித்தாந்தத்தின்' இன்னொரு பரிணாமத்தை நமக்குக் காட்டுகிறார் டாக்டர். பார்த்தசாரதி.
இது ஒரு அறக்கட்டளையாக இருப்பதால்,




யாரும் தனக்கென தனியாக லாபத்தை எடுத்துக்கொள்வதில்லை. வருமானம் மற்றும் நன்கொடைகள், அறக்கட்டளை கணக்கில் செல்கின்றன.மருத்துவமனையைச் சார்ந்த அனைவரும்-டாக்டர்.ரவீந்திரன் உள்பட - ஒரு குறிப்பிட்ட தொகையை மட்டும் மாத வருமானமாக ஏற்றுக்கொள்கின்றனர். மருத்துவமனையின் தரக்கட்டுபாடு ஒன்றே இவர்களது முக்கிய குறிக்கோள். தரம் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் மேல் பற்றார்வம் கொண்டுள்ள டாக்டர். ரவீந்திரன், எல்லாம் மிகச் சரியாக, ‘பக்கா’வாக இருக்க வேண்டும் என்று அடிக்கடி கூறுகிறார். அவரது குழுவிலிருக்கும் அனைத்து மருத்துவர்களுக்கும் இந்தக் கட்டுப்பாடுகள் மீது நம்பிக்கை இருக்கிறதா என்று கேட்டதற்கு, கடந்த 10 வருடங்களில் நூற்றுக்கணக்கான மருத்துவர்கள் உதியில் சேர்ந்து, வெளியே சென்றிருக்கிறார்கள் என்கிறார். முதுநிலை பட்டதாரிகளை பயிற்றுவிக்கும் மருத்துவமனையாதலால், ஒரு வருடத்திற்கு இரண்டு மருத்துவர்களை எடுத்துக்கொண்டு பயிற்சி தருகிறார்கள். ஒத்த மனது உள்ளவர்கள் மட்டுமே, இங்கு தொடர்ந்து பணி செய்ய அழைப்பு. கட்டுப்பாடுகளுக்கு ஈடு கொடுக்க முடியாதவர்கள், அவர்களாகவே விலகுகிறார்கள். தரக்கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துவது தொடக்க காலத்தில் மிகவும் கடினமாக இருந்தபொழுதும், நாட்பட நாட்பட வாழ்க்கையை சுலபமாக்கி, மனதிற்கு அமைதி அளித்தது. தரத்தைப் பேணுவதில் உள்ள சவால்களை மகிவுடன் நுகர கற்றுக்கொண்டுள்ள டாக்டர். ரவீந்திரன், தமது மருத்துவக் குழுவிடமிருந்தும் இதையே எதிர்பார்க்கிறார். எனவேதான், இங்கு பயிற்சி பெறும் இள மருத்துவர்கள் இங்கேயே தொடர்ந்து தங்குவதை இவர் ஊக்கப்படுத்துவதில்லை.

‘‘வெவ்வேறு படிநிலைக்கு அவர்கள் செல்ல வேண்டும். அங்கு சமரசம் செய்துகொள்ளவும் நேரிடலாம். தரம் மற்றும் கோட்பாடுகளின் முக்கியத்துவத்தை அப்பொழுது உணர்ந்து, நோக்கத்தினை புரிந்து கொள்வார்கள். உதியின் கொள்கைகளோடு அவர்கள் ஒத்திசைந்தால், இங்கு மறுபடி வருவார்கள். இல்லையென்றால், இதே நெறிமுறைகளுடன் உள்ள மருத்துவமனைகளை அவர்கள் தொடங்குவார்கள்’’ என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் டாக்டர். ரவீந்திரன். சமுதாயத்தின் கீழ்மட்டத்திலுள்ளவர்களுக்காக, மாதத்தில் மூன்று முறை கண் பாதுகாப்பு முகாம் நடத்தப்படுகிறது; அவர்களுக்கு நோய் இருந்தால் கண்டு கொள்ளப்படுகிறது. பள்ளிகளுக்குச் சென்று முகாம்கள் நடத்துவதோடு மட்டுமன்றி, அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு, கண் பார்வை திருத்தம் அல்லது அறுவைசிகிச்சை தேவைப்படும் மாணவர்களை ஆய்வு செய்து கண்டறிவதற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. ‘மாவட்ட பார்வயற்றோர் தடுப்பு மையம் ’ (District Blindness Control Society) உம், சமுதாய மன்றங்களுடனும் சேர்ந்து நடத்திய முகாம்கள், கண் பராமரிப்பு பற்றி சற்றும் அறியாமல் இருக்கும் கிராமப்புறங்களுக்கு மருத்துவத்தின் முக்கியத்துவத்தை உணர வைத்தது. சர்க்கரை நோய் மற்றும் ஏனைய பிற நோய்கள் கண்களை எப்படி பாதிக்கின்றன என்பது கூட அதுவரை பலருக்கும் அங்கு தெரியாமல் இருந்தது. இந்த முகாம்கள், சுமார் 200 நோயாளிகள் சிகிச்சைக்காகவும், தொடர் நடவடிக்கைக்காகவும் வர ஏதுவாக அமைந்தது.

மருத்துவமனையில் பணி புரியும் பணியாளர்களிடம் சுருக்கமாக மின் தூக்கியில் செல்லும்பொழுது பேச்சுக் கொடுத்ததில், அவர்கள் எவ்வளவு நன்றாகக் கவனிக்கப்படுகிறார்கள் என்பது புரிந்தது. மருத்துவரல்லாத குழுவைச் சேர்ந்தவர்கள், இரண்டு, மூன்று வருடங்களாக இங்கே பணி புரிகிறார்கள். திருமணமாகியதால் மட்டுமே வேறு ஊர்களுக்கு குடி பெயர்ந்திருக்கிறார்கள் இங்கு பணி புரிந்த சில பெண்கள்.

நன்னெறி செயற்பாடுகள் புரிந்த, அறிந்த அதிகாரம். பணியாளர்களின் மகிழ்ச்சியே இதற்குச் சான்று. எந்தத் துறையாக இருந்தாலும், தன்னலத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, சமுதாய உணர்வுடன், கடமையைச் செவ்வனே செய்தால், வெற்றி கிடைப்பதோடு, சமுதாயத்திற்கும் நல்ல பயன்கள் விளையும் - இதுவே உதி மருத்துவமனையின் ஒவ்வொரு அணுவும் நமக்குத் தெரியப்படுத்தும் செய்தி; கருத்தியல். நம் நாட்டிலும், அயல் நாட்டிலும் கண் பராமரிப்பு மற்றும் மருத்துவத்தை நாடிச் செல்லும் உலகிலுள்ள பலரிடமும் நன்மதிப்பைப் பெற்று, சமுதாயத்திற்கும், விஞ்ஞானத்திற்கும் சேவை செய்யும் உதி மருத்துவமனை உன்னதத்திற்கும், சொன்னதைச் செய்யும் பண்பிற்கும் ஒரு சிறந்த மாதிரிப்படிவம்.